Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 27

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவது தொடர்பான ................................. ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
   (1) பிரேரணை (2) உடன்படிக்கை (3) ஆவணம் (4) தீர்மானம்
2. நாட்டில் அச்சிட்டு வெளியிடப் பெற்ற நூல்கள் , பத்திரிகைகள் , துண்டுபிரசுரங்கள் முதலானவற்றின் பிரதிகள் தேசிய ................................. பேணப்பட்டு வருகின்றன.
   (1) பாராளுமன்றத்தில் (2) திறை சேரியில்
   (3) நூதனசாலையில் (4) சுவடிகள் கூடத்தில்
3. இக்காலத்தில் வெளிவரும் கவிதைகள் சில ................................... இல்லாத வெறுஞ் சொற் கோப்புகளாகவே காணப்படுகின்றன.
   (1) அடியீடு (2) குறியீடு (3) உள்ளீடு (4) வகையீடு
4. அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஆணைக் குழு செய்த ............................... அரசாங்கத்தினால் பரிசீலனை செய்யப் படுகின்றது
   (1) மதிப்புரை (2) பரிந்துரை (3) பதிப்புரை (4) முன்னுரை
5. முற்காலத்தில் அறிஞர்கள் பலர் வடமொழிச்சொற்களையும் தமிழ்ச்சொற்களையும் கலந்து ............... நடையில் இலக்கியங்களை எழுதியுள்ளனர்
   (1) அங்கதநடை (2) செந்தமிழ்நடை (3) மணிப்பிரவாளநடை (4) மறுமலர்ச்சிநடை

பகுதி 2

பின்வரும் வினாக்களுக் சுருக்கமாக விடை எழுதுக

1) பின்வரும் தொடர்களை சந்திபிரித்தெழுதுங்கள்.
   “வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர் விரும்புயாவையும் பெறாரிவர் தாமன்றோ”

2) “விரிகுழல் பைந்தொடி நாணிவேந்தவையில் முறையிடுநாள்”
   1. இப்பாடல் இடம்பெறும் இலக்கியம் என்ன?
   2. பைந்தொடி என அழைக்கப்படுபவர் யார்?

3) “உயிருடன் சென்ற ஒரு மகள் தன்னிலும், செயிருடன் வந்த இச்சேயிழை தன்னிலும்…”
   1. உயிருடன் சென்ற ஒரு மகள் யார்?
   2. சேயிழை எனப்படுபவர் யார்? செயிர் என்பதன் பொருள் யாது?

4) ‘ஐவராம் அவனிபர்க்கும் நினைவு ஏது என்று அருள் புரிந்தான் அமரர் கோமான்”
   1. அவனிபர் என்போர் யாவர்?
   2. இப்பகுதியில் அமரர் கோமான் எனப்படுபவர் யார்?

5) “கைவிடுவேன் என்று எண்ணிக் கவலைப்படாதே கண்ணார் அல்லாமேல் ஆணை, உனை அடையாட்டி காட்டுப்பள்ளி”
   1. கவலை கொள்ள காரணமாய் அமைவது யாது?
   2. காட்டுப்பள்ளி என்பது எச்சமூக கிளை மொழி?